# ஹமில்டனின் ராஜினாமாவால் ராணுவம் அதிருப்தி

(கொழும்பு)

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் ராஜினாமா இராணுவ தலைமைப் பீடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. படைத்துறையுடன் சம்பந்தப்படாத சிவில் அதிகாரி ஒருவர் இப்பதவிக்கு நியமனம்

(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 24 இதழ் 368
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-2-1995


## படையினர் மத்தியில் விரைவில் பெரும் மாற்றம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு, வடபகுதி படையினர் மத்தியிலும் பெரும் மாற்றங்கள் நிகழும் என்று 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலராக சந்திரானந்த டீ சில்வா

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா நியமிக்கப்படுவார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின

(4ம் பக்கம் பார்க்க)

## ★ சமாதானத்தில் இரு பகுதியினரும் அக்கறை

# பிரபா - சந்திரிகா ஒப்பந்த மூலம்

# யுத்தத்தை நிறுத்த முயல்வோம்

## - லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு -

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான புதிய அரசாங்கம், விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் திரு. வே.பிரபாகரனுடன் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தி பத்து வருடங்களுக்கு மேல் நாட்டை நாசப்படுத்திய யுத்தத்துக்கு முடிவு காணும் என்று வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் வாஷிங்டனில் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்காவில் தங்கியுள்ள திரு. கதிர்காமர் வாஷிங்டனில் வைத்து லேக் ஹவுஸ் குறூப் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். சமாதான ஒப்பந்தம் இலகுவாக செயற்பட்டுவிடும் என்று தான் கூறவில்லை என்பதை ஏற்றுக்கொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)



## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இராணுவத் தளபதி தெரிவில் அரசுக்கு பெரும் நெருக்கடி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ தளபதி பதவிக்கு தற்போதைய தளபதி ஜெரி டீ சில்வாவிற்கு பின்னர் யாரைத் தெரிவு செய்வது என்பதில் அரசுக்கு பெரும் நெருக்கடிநிலையேற்பட்டுள்ளது. இராணுவ தளபதி பதவிக்காக மூன்று இராணுவ மேஜர் ஜெனரல்கள் கடும்

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு வெளியே சமாதானப் பேச்சு?

(கொழும்பு)

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை இலங்கைக்கு வெளியில் நடத்தலாமென்ற ஆலோசனை ஒன்றை முன்னாள் லண்டன் லூஸியன் மாநகர மேயர் சின்னமணி, பாதுகாப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புத் துறைக்கு அரச ஊழியர்; சந்திரிகா தொடங்கியுள்ள அமைதிமுயற்சியின் ஒருகூறு!

[லண்டன்)

"படைத்துறையைச் சாராத அரசு ஊழியர் அணியைச் சார்ந்த ஒருவரை பாதுகாப்பு செயலராக நியமிக்கும் நடவடிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொடங்கியுள்ள அமைதி முயற்சியின் ஒரு கூறாகும்.'' என்று பி.பி.ஸி தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும் தெரிவித்துள்ளதாவது: பாதுகாப்பு அமைப்புக்களின் மீது கடும் போக்கு படையினர் கொண்டுள்ள பிடியை உடைக்க ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளில் இதுவும் ஒன்று

(4ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் முக்கிய பிரச்னை வடக்கு-கிழக்கு யுத்தமாகும்

(கொழும்பு)

நமது நாட்டில் அதிமுக்கிய பிரச்னை வடக்கு - கிழக்கு யுத்தமேயாகும். இதற்கு விரைவில் சமாதான தீர்வு காணவேண்டியது அவசியம் என்று பிரதி பாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் அரசு தரப்புக்கு விளக்கம்

(கொழும்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்துப் போர் இடைநிறுத்தம் குறித்துப் பேசிய கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களான வெளிநாட்டுப் பிரதிநிதிகள்,

(4ம் பக்கம் பார்க்க

## சிறிமா - சந்திரிகா இடையில் அடிக்கடி கருத்து மோதல்!

[கொழும்பு]

ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கும் அவரின் தாயாரான பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குமிடையில் தற்போது கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக ஏ. எப்.பி. செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி திருமதி சந்திரிகா முன்னெடுத்துச் செல்லும் புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்தை தான் எதிர்ப்பதாக பிரதமர் ஸ்ரீமாவோ கூறியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி திருமதி சந்திரிகா திடீர் திடீர் என்று வெளிநாடுகளுக்குச் சென்று வருவதாலும் தாய்க்கும் மகளுக்குமிடையில் கருத்து மோதல்

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு, உப்பளம் விரைவில் திறக்கப்படும்

(கொழும்பு)

ஆனையிறவு உப்பளம் மீண்டும் விரைவில் செயற்படவுள்ளது.

லங்கா உப்புக் கம்பனியின் தலைவர் ஹெலிகொப்டரில் தனது சிரேஷ்ட அதிகாரிகளுடன் நேற்று ஆனையிறவு சென்றிருந்தார்.

ஆனையிறவு உப்பளத்திலும் அதனையொட்டிய குறிஞ்சாதீவு உப்பளத்திலும் வருடாந்தம் 80 ஆயிரம் தொன் உப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பிலுள்ள

# தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்படும்

[கொழும்பு]
அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரையும் போது கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் பிரச்னைக்கு தீர்வு ஒன்றை முன் வைக்கவுள்ளதாக பி.பி ஸி. சந்தேசிய தெரிவித்தது:

கடந்த அரசாங்கம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைகூட நடைமுறைப்படுத் தவில்லை என்று தமிழ் கட்சிகள் குறைபட்டுக்கொண்டன என்றும் சந்தேசிய மேலும் தெரிவித்தது,

நாடாளுமன்றில் உள்ள தமிழ் எம். பிக்கள் அனைவரும் அமைச்சர் தொண்டமானின் தலைமையில் இந்த விடயம் குறித்து ஒருமித்து நடப்பதென அண்மையில் முடிவு செய்ததும் தெரிந்ததே.

ம-சி

உ

# அகில இலங்கை கம்பன் கழகம்

வழங்கும்

# மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடாத்தும் கம்பன் விழாவில்
மக்கள் கருத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு மேற்படி

★ **மகர யாழ் விருதினை** ★

வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே.

★ இவ்விருது வழங்கலைப் பாராட்டி, வெளிநாட்டிலுள்ள பல கழக நண்பர்கள் இவ்வருதின் தொகையை அதிகரிப்பதற்குத் தாங்கள் உதவ முன்வந்துள்ளனர்.

எனவே,

எமது கழகம் பதினைந்து ஆண்டுகளை நிறைவு செய்யும்

**இவ்வருடத்திலிருந்து இவ்விருதிற்கான**

**பணமுடிப்பை**

**ரூபா 1,00,000 (ரூபா ஒரு லட்சம்)**

ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளது.
இவ்விருதிற்குரியவராகத் தெரிவு செய்யப்படுபவருக்கு மேற்குறித்த
தொகைப் பணமுடிப்போடு
தங்கப்பதக்கமும், வெள்ளியிலான மகர யாழ் விருதும்
முதல் நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

★ தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும் இனப்பற்றோடும் மனிதாபிமானத்தோடும் இம்மண்ணுக்காக தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ்விருதுக்காக தேர்ந்தெடுப்பது எமது கழகத்தின் மரபு.

1993க்கான விருதினை
வைத்திய கலாநிதி ச. சிவகுமாரன் அவர்களும்
1994ற்கான விருதினை
முன்னாள் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்
அமரர் அ. துரைராசா அவர்களும்
பெற்றமை அறிந்ததே.

★ இவ்வாண்டு இவ்விருது பெறுதற்குப் பொருத்தமான சான்றோரின் பெயர் விபரங்களை, பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க் கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும்

**15 - 02 - 1995க்கு முன்னர்**

அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.
விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால்
தீர்மானிக்கப்படும்

சிபார்சு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேற்புறத்தில்

**'மகர யாழ் விருதுக்கான சிபார்சு 1995"**

எனக் குறிப்பிடவும்.

— ★ ''கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்'' ★ —

தி. திருநந்தகுமார்,
தலைவர்.

க. குமாரதாசன்,
செயலர்.

**அகில இலங்கை கம்பன் கழகம்**

**300, கோயில் வீதி, <--> நல்லூர்.**

ஏ-4774)

நல்லூர் ப. நோ. சங்கம்

# பரீட்சையில் சித்தி பெற்ற மாணவருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் ப. நோ. கூ. சங்கம் 1994ம் ஆண்டு நடைபெற்ற 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும், க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் அதிவிசேட சித்திகள் பெற்று மாவட்ட ரீதியில் முன்னிலையிலுள்ள மாணவர்களையும் பாராட்டிப் பரிசளித்து ஊக்குவிக்க தீர்மானித்துள்ளது.

மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களாகவுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் இத்திட்டத்தின்கீழ் பரிசில்களைப் பெறத் தகுதியுடையவராவர். இதற்கான விண்ணப்பத்துக்கான கடைசி நாள் இம்மாதம் 15ம் திகதி புதன்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் கடந்த ஆண்டு, ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற இச்சங்கத்தின் எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கு பாராட்டி பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

162-ரி

அபிவிருத்திக்கென

# எம். பி. க்களுக்கு 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)
அபிவிருத்தி திட்ட வேலைகளுக்காக ஒவ்வொருநாடாளுமன்ற உறுபபினருக்கும் 25 லட்சம் ரூபாவை அரசு வழங்கவுள்ளது.

அபிவிருத்தி திட்ட அமுலாக்கங்களை அவதானிக்க மாவட்டங்கள் தோறும் அபிருத்திக்குழுக்கள் அம்மாவட்டத்தை சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இயங்கும்.

இதற்கேற்ப நாட்டிலுள்ள 25 மாவட்டங்களுக்கும் என 29 எம்பிக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் குழுக்களில் மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் அரச அதிகாரிகளும் அங்கம வகிப்பர். இந்தக்குழுக்கள்மாவட்ட அபிவிருத்திலைய இனம்கண்டு அதற்கேற்ப செயற்படுவர் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. - சி

## கடையில் திருட்டு

(அரியாலை)
யாழ். கைலாசபிள்ளை கோவில் வீதியிலுள்ள இரு கடைகளில் கடந்த 3ம் தேதி இரவு பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளன. பகல் ஆஸ்பத்திரிவீதியிலுள்ள ஒரு கடையில் கயிற்றுக்கட்டு திருட்டுப் போயுள்ளதாக தெரிய வருகின்றது. - 59

விற்பனையாகிறது!

**அறிவுக் களஞ்சியம்**

**29**

[எ-4772)

## இன்று

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 7ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

15ம் திகதி புதன்கிழமை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 16ம் திகதி வியாழன் காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். 154

31-ம் நாள் **நினைவஞ்சலி**



★

தோற்றம்:
1910-12-26

மறைவு:
1995-01-08

★

# திருமதி வள்ளியம்மை தம்பிஐயா

எமது அன்புத் தாயாரின் 31-ம் நாள் நினைவு தினம் 07-02-95 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வுவிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

136/4, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1392)

### மணிவாக்கு

உழைக்க உறுதி பூண்டவன் எதிலும் வெற்றி பெறுகிறான். பொது வாழ்க்கையிலும், தனித்தனி வாழ்க்கையிலும் உழைக்க நினைக்காமல் இருப்பவனை அந்த சோம்பல் நரகத்திற்கு கொண்டுபோய்ச் சேர்க்கும். உழைப்பே உயர்வு தரும்.

- திருவள்ளுவர்

## நமது நோக்கு

### புதிய நிலைப்பாடு

கண்காணிப்புக் குழுத் தலைவர்களாக விளங்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைத் தலைவர் பிரபா சந்தித்து வரவேற்றுள்ளார்.

அவர்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும், சர்வதேச முயற்சிகள் தொடர வேண்டும் என்றும் கூறியதோடு விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளையும் அறிமுகம் செய்து வைத்தார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அவரைச் சந்தித்துப் பேசியதில் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சில செயற்பாடுகள் ஒரு தரப்பான நிகழ்ச்சிகளாக மட்டும் அமையக்கூடாது. தமிழ்ச் சமுதாயத்தையும் சமநிலையில் வைத்துச் செயற்பட வேண்டும் என்ற உறைப்பான உண்மையைப் டலர் உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறோம்.

பேச்சுக்கள் தேக்கநிலை அடைந்ததற்குப் பலரும் பல காரணங்களைக் கூறினார்கள்.

ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் சுருக்கமாக அமைந்த காரணத்தால் இராணுவத்தினர் தாம் விளங்கக் கொண்டபடி செயலாற்றி வந்தனர்

இதனால் - மீன்பிடி அனுமதி, தடை நீக்கம் போன்றவற்றில் சில சந்தேகங்களும் விபரீத விளைவுகளும் ஏற்பட்டன.

எனவே - நீதியான கண்காணிப்புக்கு பல விஷயங்கள் தெளிவாக்கப்பட வேண்டியுள்ளது; பேசித் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நாற்பது ஆண்டு காலப் பிரச்னையை, மந்திரக்கோல் காட்டி, மக்களை மயக்கிவிட்டுத் தீர்த்துவிடலாம் என்ற கணிப்பீடு தவறாகும்.

இதனையே ஜனாதிபதியும் ஒப்புக் கொண்டு தன்னிடம் மந்திரக்கோல் இல்லை எனக் கூறினாரோ?

நீதியான, கௌரவமான தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் தெளிவானதாக அமைய வேண்டும்.

எனவே - கண்காணிப்புக்குழு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இரு தரப்பு நிலைப்பாடுகளையும் நேரில் அறிவது அவசியம்.

அந்த வகையில் - தலைவரே அவர்களை வரவேற்றதும், சர்வதேச முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்ததும் வரலாற்று முக்கியத்துவமான செயற்பாடாகும்!

### நாளை வரவு– செலவுத் திட்டம்

# பாதுகாப்புச் செலவாக 3,300 கோடி ரூபா ஒதுக்கு

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்காக 3 300 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகையோடு ஒப்பிடுகையில் இது 400 கோடி ரூபா அதிகமாகும். வடக்கு-கிழக்கில் போர்நிறுத்தப்படாத பட்சத்தில் இத்தொகையை அரச செலவினத்தில் உள்ளடக்க அரசு தீர்மானித்துள்ளதாக பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல்அனுருத்த ரத்வத்தை கூறியுள்ளார்

போர் நிறுத்தப்படும் பட்சத்தில் இப் பெருந்தொகைப் பணம் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுவதுடன் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்க பயன்படும். கடந்த ஆண்டு பாதுகாப்பிற்காக 2,900 கோடிரூபா ஒதுக்கப்பட்டது. கடந்த பதினொருவருடத்தில்ஒவ்வொருவருடமும்சுமார் 2,500 கோடி ரூபா பாதுகாப்பு செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டது எனவும் கூறினர்.

இவ்வாண்டு பாதுகாப்பு செலவிற்கு 2,700 கோடி ரூபாவை ஒதுக்குவதென அரசு முன்னர் தீர்மானித்திருந்தது.

இவ்வாண்டிற்கான வரவு-செலவுத்திட்டம நாளை 8ம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வரவு செலவுத் திட்டம் பொருளாதார, சமூக அபிவிருத்தியை நோக்கிய தொன்றாக வே அமையுமென ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

சமாதானம் தொடர்பான அரசின் உண்மையான போக்கை அறிய பல்வேறு தரப்பினரும் அரசு சமர்ப்பிக்கவுள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கையை எதிர்பார்த்துள்ளனர். பொ. ச. முவினால் முதல் தடவையாக சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் சுமார் 9,667 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

[சி]

### அகதிகள் அந்தஸ்து கோரி

# கனடா செல்லும் இலங்கையரின் விண்ணப்பங்கள் துரித பரிசீலனை

(ரொறன்ரோ)

இலங்கையிலிருந்து தகுந்த ஆவணங்களின்றி கனடாவுக்குச்சென்றவர்களின் அகதி அந்தஸ்து கோரிய விண்ணப்பங்கள் துரிதமாக பரிசீலனை செய்யப்படுகின்றன.

கனடாவில் ஆசிய நாட்டவர்கள் பெருமளவில் குடியேறுவதை கட்டுப்படுத்த கனேடிய அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தகுந்த ஆவணங்களின்றி கனடாவில் உள்ள விமான நிலையங்களைச் சென்றடையும் வெளிநாட்டவர்கள் அவர்கள் வந்த ஒரு சில நாட்களுக்குள் திருப்பி அனுப்படுவார்கள் எனவும் கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

இலங்கைத் தமிழ் அகதிகளை மேற்கு ஐரோப்பிய நாடுகள் திருப்பி அனுப்பத்தொடங்கியுள்ளதால் அந்நாடுகளில் உள்ள தமிழர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

(சி)

# சட்டதிட்டங்களுக்கு அமையவே யாரையும் கைது செய்யலாம்

[கொழும்பு]

புதிய நகல் அரசியல்அமைப்புத்திட்டத்தின்படி சட்டத்திற்கமைய ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பிரமாணங்களை தவிர வேறு எந்தக்காரணங்களுக்காகவும் ஒருவரைக் கைது செய்யமுடியாது.

ஒருவர் கைது செய்யப்படின் அவர் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் அவர் கைது செய்யப்படுவதற்கான காரணத்தை அப்போதே அவருக்கு தெரியப்படுத்தவேண்டும்.

அவ்விதம் கைது செய்யப்படுபவர் தாம் விரும்பிய ஒரு சட்டத்தரணியுடன் ஆலோசனை கலப்பதற்கு அல்லது தமது சார்பில் சட்டத்தரணிமை ஏற்படுத்துவதற்கு அவருக்கு உரிமை உண்டு என்பதை அதிகாரிகள் அவருக்கு தெரியப்படுத்தவேண்டும்.

அடிப்படை உரிமைகள் மீறப்படும் ஒவ்வொருவரும் அதுபற்றி உயர்நீதிமன்றில் விண்ணப்பம் செய்ய உரிமையுடையவராவர். இத்தகைய விண்ணப்பத்தை சமர்ப்பிபதற்கான கால அவகாசம் தற்போது 30 நாட்களிலிருந்து 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஏதாவது ஒருபொது அமைப்பு அல்லது சம்பந்தபட்டவரின் குடும்ப உறுப்பினர் அல்லது அவரது உறவினர் அல்லது அவரது நண்பர் உயர்நீதிமன்றத்திற்கு இத்தகைய விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்,

சி

## இராசி பலன்

07–02–1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு தை 24)

ஸப்தமி காலை 7-18 வரை, பரணி நள்ளிரவு 12-26 வரை சித்தயோகம், இராகுகாலம் மாலை 3-35 முதல் 5-05 வரை, சுபவேளை காலை 11-55 முதல் 12-35 வரை.

மேஷம்: பிறர் தயவு, பொருள் பேறு, தியாகம்.

இடபம்: மன உளைச்சல், பண்பு கெடல், அலைச்சல்.

மிதுனம்: காரியசித்தி, உயர்ந்த சிந்தனை, பாராட்டு.

கடகம்; இடமாற்றம், பணப்புழக்கம், தாயார் உதவி.

சிங்கம்: முறுகல் நிலை, உடல் உபாதை, மனச்சுமை.

கன்னி: இடர்பாடு, கடன் சுமை, அகால உணவு.

துலாம்: எதிர்பாராத வெற்றி, முயற்சி பலிதம், தொழில் பாராட்டு.

விருச்சிகம்: சுபகாரியம், விவேகமான செயல்பாடு, பயணம்.

தனுசு: தன்நிலை இழத்தல், கடும் சினம் துயரம்.

மகரம்: தப்பபிப்பிராயம், சகோதரபகை, காரியதடை,

கும்பம்: கலை உணர்வு, வயோதிபர் ஆசி, முதன்மை நிலை.

மீனம்: குடும்ப சச்சரவு, மனச்சஞ்சலம், பணியாள் துயர்.

ஜோஸ்யர்

### இம் மாதம் நடைபெறும்

# சட்டமன்ற தேர்தல்களில் காங்கிரஸ் தோற்கும்?

(புதுடில்லி)

இந்தியாவில் இம்மாதம் நடைபெறவுள்ள ஐந்து சட்டசபைத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் தோல்வியைத் தழுவுமென 'இந்தியா ருடே' நடாத்திய கருத்துக்கணிப்பிலிருந்து தெரியவந்துள்ளது.

இத்தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சி, சிவசேனை கூட்டணிக்கு 31 சதவீத வாக்குகளும் காங்கிரஸிற்கு 23 சதவீத வாக்குகளும் ஜனதா தளத்திற்கு 13 சதவீத வாக்குகளும் கிடைக்குமென அக்கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வருட பிற்பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் 3 மாநிலங்களில் படுதோல்வியைத் தழுவியதால் கட்சித் தலைவரும் பிரதமருமான திரு. நரசிம்மராவ் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் இந்த தேர்தல்கள் அவரது தலைமைப்பதவி குறித்து நிர்ணயிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

[சி)

### நெடுங்குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வீணாகிப்போகும் மழை நீரைச் சேமித்துப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தும் நோக்குடன் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள தனங்கிளப்பு நெடுங்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

விறகிருந்தும் உணவின்றித் தவித்தோமே — இன்று உணவிருந்தும் விறகில்லையே.

## நிவாரணம்

(அரியாலை)

இடம் பெயர்ந்தோருக்கான நவம்பர் மாதகடைசிஇருவாரங்களுக்கான இலவச நிவாரணப்பொருட்கள் மா, சீனி, மைசூர் பருப்பு, வெந்தயம், பால்மா வகைகள் வழங்கப்படவுள்ளன.

அரிசி வழங்கப்படமாட்டாது. இத்தகவலை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். —59-ரி

## பலதும் பத்தும்

### நீல யானையா?

பாப்பரசரை வரவேற்கக் காத்திருந்த வேளை.. அமைச்சர்கள் தர்மசிறியும், ஜி. எல். பீரிசும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலோடு நிற்கிறார்கள்! நகைச்சுவையோடு கணை தொடுப்பதில் வல்லவர் தர்மசிறி. வரவேற்கக் கொண்டுவரப்பட்ட 'கந்துலா' என்ற குட்டி யானை அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது.

''கவனித்தீர்களா கந்துலாவை?'' ரணிலைச் சீண்டினார் தர்மசிறி, யானைமீது போடப்பட்ட நீலப் போர்வையைக் காட்டி!

''கவனித்தேனே! அரசாங்கமே இன்று நீலப் போர்வையுடன் கூடிய யானைதானே!'' - இது ரணில் பதில். யானைக் கட்சியினரின் கொள்கைகளையே நீலக்கட்சியினர் தொடருவதை இப்படி இடித்துக் கூறினாராம்!

– மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02–07

செவ்வாய் இரவு

08-01 ஊர் சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் தகவற் களஞ்சியம்
08 20 நலந்தானா - மாரடைப்பு ஏன் ஏற்படுகிறது என்பது பற்றி வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''விற்பனை''
08-50 மலரும் மொட்டுக்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

1995-02–08

புதன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07 35 பத்திரிகைச்செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–02-07

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானொலி மதியூகம்-05
06-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
06-02 இவ்வாரம் இவர்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# வடபகுதிக்கு கப்பல் மூலம் பாவனைக்கு உதவாத அரிசி அனுப்பிவந்தது கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்துக்கு அரசாங்கம் கப்பல் மூலம் இதுவரை அனுப்பிவந்த அரிசி, பாவனைக்கு உதவாதவை என்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: ''வடபகுதிக்கு கப்பல் மூலம் அரிசி அனுப்பும் பொறுப்பை நெல்சந்தைப்படுத்தும் திணைக்களத்திடமே, அரசாங்கம் ஒப்படைத்து இத்திணைக்களம் கொழும்பில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் இருந்த பாவனைக்குதவாத அரிசிகளைப் பெற்று கப்பல் மூலம வடபகுதிக்கு அனுப்பிவந்துள்ளது. மொத்த வியாபாரிகளிடம் இருந்து வாங்கும் அரிசிக்கு பதிலாக, விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் புதிய நெல்லை, நெல்சந்தைப்படுத்தும் திணைக்களம் அவர்களுக்கு வழங்கி வந்தது. தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தற்போது விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

வி-ரி

நாட்டில் முக்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பொது வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

நம் நாட்டில் மகாவலி அபிவிருத்தி திட்டம் 5,900 கோடி ரூபாவில் பூர்த்தி செய்யப்பட்டது. எனவே யுத்தத்துக்கு செலவாகும் பணம் மீதமாகுமானால் நாட்டில் பல அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். -ரி

ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. 1989ம் ஆண்டிலிருந்து இத் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. இவற்றில் பணியாற்றிய 400 பேருக்கு திறைசேரி தொடர்ந்தும் சம்பளம் வழங்கி வருகின்றது.

மூன்பு உற்பத்தியான உப்பு தற்போதும் பாதுகாப்பாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த உப்பளங்களுக்கு அருகிலேயே ஆனையிறவு இராணுவ முகாமும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2,000 பேரை இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் 2000 பேரை இடமாற்றும்படி அரசியல்வாதிகள் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். என்று 'லங்காதீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும், தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதற்கு, உத்தேசித்துள்ளார்கள் என்றும் 'லங்காதீப' மேலும் தெரிவித்தது.

ம-ரி

# தேசிய அரசியல் பிரச்னையாக இனப்பிரச்னை 'ஏற்பட்டுள்ளது

## - அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இனப் பிரச்னையைத தேசிய அரசியல் பிரச்னையாக, தென்னிலங்கையில் உள்ள அநேக அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக நீதி மற்றும் நாடாளுமன்ற அரசியல் விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள், வடக்கு-கிழக்குப் பிரச்னையை ஒரு பயங்கரவாதப் பிரச்னையாக மட்டுமே நோக்கினர்கள் என்றும் தெரிவித்தார்.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தின்போது வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கென ஒரு பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதாகப் பிரபல சிங்களப் பத்திரிகையான 'திவயின' தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரசியல் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகச் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. க-ரி

## கண்காணிப்புக்குழு — பிரபா சந்திப்பு

# புலிகளின் சமாதான உணர்வுக்கு எடுத்துக்காட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சென்ற மோதல் தவிர்ப்பு கண்காணிப்புகுழு தலைவர்களான வெளிநாட்டுப் பிரதிநிதிகளை, விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் சந்தித்தது, விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது, என்று வெரித்தாஸ் நேற்று தெரிவித்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் பொதுவாக வெளிநாட்டுப்பத்திரிகையாளர்களையோ அல்லது வெளிநாட்டுப் பிரதிநிதிகளையோ சந்திப்பதைதவிர்த்து வருபவர்.

ஆனால் இம்முறை யாழ்ப்பாணம் சென்றமேற்படி குழுவை தலைவர் பிரபாகரன் சந்தித்து 30 நிமிடங்களுக்கு மேல் உரையாடியுள்ளார். இச்செயலின் மூலம். விடுதலைப் புலிகள் சமாதானத்தை பெரிதும் விரும்புகின்றார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. என்று வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

(வி-ரி)

படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளிக்கிழமை ஹமில்டன் வனசிங்க ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து தனது ஓய்வுக் கடிதத்தை கையளித்ததார், ஜனாதிபதி அதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொலிஸ் மற்றும் முப்படையிலும் பெரும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ம-ரி

சமாதானத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அதிகார பரவலாக்கம் என்பதன் அர்த்தம், அதன் அளவு, பிரதேசம் போன்ற வ்வாறான பல சிக்கல்களை நாம் ஆராய வேண்டியுள்ளது, ஆனால் இவை நாம் அமர்ந்து பேசக் பிரச்னைகளாகும். என்றும் அவர் கூறினர்.

புலிகள் சமாதானத்தில் தாம் அக்கறை கொண்டுள்ளவர் போல் பாசாங்கு செய்து உண்மையில் எம்மை ஏமாற்றுவதற்காக அவர்கள் மறைமுகமான தந்திரோடாயங்களை கொண்டுள்ளனரா? என்றும் மோதல் தவிர்ப்பை பயன்படுத்தி தம்மை மீளக்கட்டியெழுப்ப அவர்கள் முனைகின்றனரா? என்றும் என்னைக் கேட்டால் இந்த தடவை அவர்கள் சமாதானம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டும் பல காரணங்கள் இருக்கின்றன என்றும் அவர் கூறினர். [ரி)

ஹமில்டனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவதை அடுத்தே இராணுவத் தரப்பினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஹமில்டனின் இராஜினாமாவை அடுத்து ஏனைய படைத்துறை அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் படையினர் மத்தியில் குழப்ப நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முக்கிய பதவிகளுக்கு சிவில் அதிகாரிகளை நியமிக்கும் அரசாங்கத்தின் கொள்கையை அமுல் படுத்துவதற்கு வசதியாக தான் இராஜினாமா செய்துள்ளதாக ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் ஐந்து நட்சத்திரங்களைக் கொண்ட பதவிகளை வகித்து வந்த

இராணுவத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி போடுவதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மூவரும் தற்போதைய அரசுக்கு எதிரான கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் தொடர்புகள் கொணடுள்ளதால் யாரை அடுத்த இராணுவ தளபதியாக தெரிவு செய்வது என்பது அரசுக்கு நெருக்கடியாகவுள்ளது.

சிறிமா - சந்திரிகா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஏற்பட்டு வருவதாகவும் மேற்படி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்காவின் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியில் 4 பிரிவுகள் உள்ளன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் ஒரு பிரிவும், சிறிமனி அத்துலத்முதலியின் ஒரு பிரிவும், லிபரல் வலதுசாரியான ரவி கருணாரத்ன அணி ஒரு பிரிவும், சந்திரிகா குமாரதுங்க சார்பான ஓர் அணியும் ஆளும் கட்சியில் உள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. வி-ரி

பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றன.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் விதத்தில் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

சிவில் அதிகாரி ஒருவரே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வரவேண்டும் என்பது ஆளுங் கட்சியின் கொள்கையாகும்.

சிரேஷ்ட சிவில் நிர்வாக அதிகாரியான திரு. சந்திரானந்த டி சில்வா எதிர்வரும் மே மாதம் வரை தேர்தல் ஆணையாளர் பதவியை வகிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ,ரி

ஒரே ஒரு அதிகாரி ஹமில்டன் வனசிங்கா ஆவார்.

1993-ம் ஆண்டில் மத்திய பாதுகாப்பு அமைச்சு செயலாளராக பதவி யேற்பதற்கு முன்னர் வடக்கு — கிழக்கு பகுதிகளில் சிரேஷ்ட இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

பாதுகாப்புத்

[1ம் பக்கத தொடர்ச்சி)

கும்.

இலங்கையில் படைத்துறையைச் சாராத ஒருவர் பாதுகாப்புச் செயலராக இருந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகிறது.

1977-ல் முந்திய அரசு ஆட்சிக்கு வந்தது முதல் அது பதவியிலிருந்த காலம் முழுவதுக்கும் இராணுவத்தில் உயர் பதவி வகித்தவர்களே ஓய்வு பெற்றதும் பாதுகாப்பு செயலாளர் பதவியில் நியமிக்கபபட்டார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் போரை தொடர்ந்து நடத்துவதில் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அதிகார புலன் இருப்பதாக கருதப்படுவதால் இராணுவத்தோரை பாதுகாப்பு செயலாளராக நியமிக்கும் முறை கடுமையாக குறை கூறப்பட்டது. [ரி)

இலங்கைக்கு

1-ம் பக்கத தொடர்ச்சி)

அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் தெரிவித்ததாக 'சண்டே லீடர், தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்தை ஜெனரல் ஹமில்டனும் ஏற்றுக்கொண்டதாகவும், எனினும் தற்போது இப்பேச்சுக்களை இலங்கைக்கு வெளியில் நடத்துவது குறித்துக் கேட்கப்படவில்லை எனவும் ஹமில்டன் தெரிவித்தார்

ஆனாலும் இதனை நான் விரும்புகிறேன். இது அடுத்த திம்பு பேச்சுவார்த்தைபோல் அமையலாம் எனவும், எனினும் அதற்கான சரியான நேரம் இன்னும் வரவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களை எந்த ஒரு ஐரோப்பிய நாட்டிலாவது இயற்கை வளம் கொழிக்கும் இடத்தில் நடத்தலாம் என திரு. சின்னமணி ஆலோசனை தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கான தமது ஒரு வாரகாலப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியபோதே திரு. சின்னமணி இந்த ஆலோசனையைக் கூறினாராம். தமது இந்த ஆலோசனையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டால் இது குறித்துத் தாம் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் இது பற்றிக் கதைப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறினர்

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பக்கட்டத்திலேயே இருப்பதால், இது குறித்து அரசே முடிவு எடுக்கவேண்டும் எனவும் ஹமில்டன் தெரிவித்துள்ளார். -சி

## தமிழர்களுக்காக பேச

# தமிழ் குழுக்களுக்கு அருகதை கிடையாது

(கொழும்பு)

'' தமிழ் மக்களுக்காகக்கதைப்பதற்கு விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எந்தத் தமிழ்க் குழுக்களுக்கும் அருகதை கிடையாது.''

இவ்வாறு தாம் சந்தித்த யாழ்ப்பாணத்துப் புத்திஜீவிகளும், மத குருமாரும், பொதுமக்களும் தெரிவித்ததாக, முன்னாள் லண்டன் லூஸியன் நகர மேயர் திரு. சின்னமணி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுங்கயில்: யாழ்ப்பாண மக்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளைவிட, விடுதலைப் புலிகள் மீதே மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அரசுடன் தொடர்பு வைத்துள்ள கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளை இவர்கள் இகழ்ந்து பேசுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா பெரும்பான்மைச் சிங்கள மக்களின் தலைவரே ஒழிய, முழு இலங்கையின் தலைவர் அல்ல எனவும் யாழ்ப்பாண மக்கள் கருதுகிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவினால் இனப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என விடுதலைப் புலிகள் கருதவில்லை. ஆனாலும் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அங்கீகாரத்தை மக்கள் அவருக்கு வழங்கியுள்ளதாகவும் அவர்கள் கருதுகின்றனர். புலிகள் அரசிடமிருந்து எந்த ஒரு சலுகைக்கும் தங்கி இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். -சி

கண்காணிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா அரச அதிகாரிகளுக்கு இந்தப் பேச்சுக்கள் குறித்து விளக்கம் அளிக்கவுள்ளனர்.

அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி இத்தகவல் வெளியிடப்பட்டது. -ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-